# மெட்ரோ ரயில் நிலைய மருத்துவ முகாம்: 1960 பேருக்கு பரிசோதனை

சென்னை, ஜன.31: சென்னை வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற இலவச மருத்துவ முகாமில் 115 பேர் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் நடைபெற்ற மருத்துவ முகாமில் 1,960 பேர் பயனடைந்ததாக மெட்ரோ ரயில்வே அதிகாரி தெரிவித்தார்.

இதன் தொடர்ச்சியாக வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் வியாழக்கிழமை அன்று நடைபெற்ற மருத்துவ முகாமில் 115 பேர் பயனடைந்தனர். இவர்களுக்கு ரத்த அழுத்தம், ரத்த சர்க்கரை அளவு, இதய துடிப்பு விகிதம் உள்பட பல்வேறு மருத்துவச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தேவையான மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டது. மொத்தம் 11 நாள்கள் நடைபெற்ற மருத்துவ முகாமில் 1,960 பேர் பங்கேற்று பயனடைந்தனர்.